நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42−ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 345/2022
அரசு தரப்புக்காக அ. சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பவாணி | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 2 | | | |

1, 2 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2026.

**முதல் விசாரணை**− (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.54 )

நான் தற்போது பண்ருட்டி தாலுக்கா புலவன்குப்பம் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் முந்திரி கொட்டை உடைக்கும் வேலை செய்து வருகிறேன். எனது கணவர் சென்னையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராசாத்தி எனது அம்மா. அ.சா.1 எனது 2−வது அக்கா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். எனது அம்மா கரிக்கையில் வசித்து வந்தார். எனது அப்பா 2021−ல் இறந்துவிட்டார். 10.09.2021 ஆம் தேதி எனது சித்தப்பா வெங்கடேசன் என்பவர் வீட்டில் காதுகுத்தும் விழாவிற்கு நான் ஒரு வாரமாக எனது சொந்த ஊரான கரிக்கையில் வந்து தங்கினேன். 10.09.2021 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் நான், எனது அக்கா, எனது அம்மா எங்கள் வீட்டில் இருந்தோம். எனது சித்தப்பா சாரங்கபாணி

சந்திரலேகாவின் கொழுந்தனாரான சதிஷ்குமாரிடம் சென்று சந்திரலேகாவின் வீட்டில் யாரோ ஒருவர் செல்வதாக சென்று சொன்னபோது அதற்கு சதீஷ்குமார் எங்கள் வீட்டிற்கு யார் வந்தால் உனக்கு என்ன என்று சொன்னார். ஆஜர் எதிரிகள் எனது சித்தப்பாவிடம் சண்டை போட்டு கொண்டு இருந்தார்கள். நான் 8 மாத கர்ப்பிணியாக இருந்ததால் சற்று தூரம் தள்ளி நின்றிருந்தேன். எனது அக்கா சங்கீதாவும் எனது சித்தியும் சண்டையை விலக்கி விட்டார்கள். எனது அம்மாவும் சண்டையை விலக்கி விட்டார். எனது அம்மா சண்டையை விலக்க சென்றபோது ஆஜர் எதிரிகள் எனது அம்மாவை என்னடி தேவிடியா கொழுந்தனாருக்கு சப்போட்டா என்று சொல்லி எனது அம்மாவை கையால் அடித்தார்கள். எனது அம்மா மயங்கி கீழே விழுந்து விட்டார். தனவேல், சதீஷ்குமார், சந்திரலேகா ஆகிய மூவரும் எனது அம்மாவை கையால் மார்பிலும், முகத்திலும், வயிற்றிலும் எனது அம்மா மயங்கி விழுந்த பிறகும் அடித்துக்கொண்டு இருந்தார்கள். எனது சித்தப்பா சாரங்கபாணி ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னார். அவர்கள் எனது அம்மா இறந்துவிட்டதாக சொன்னார்கள். 11.09.2021 ஆம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு காவல் நிலையம் சென்று எனது அக்கா புகார் கொடுத்தார். பிறகு எனது அம்மாவை போலிசாரிடம் அடையாளம் காட்டினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வேண்டுகோளின் பேரில் உணவு இடைவேளைக்கு பிறகு ஒத்தி வைக்கப்படுகிறது.
(முடிக்கப்பட்ட நேரம் 01.04)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 04.01 )

புலவன்குப்பத்திற்கும் எனது அம்மா ஊரான கரிக்கைக்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 கி.மீ தூரம். எனது சித்தப்பா வெங்கடேசன் என்பவர் எனது அப்பாவின் சொந்த தம்பி என்றால் சரிதான். எங்கள் வீட்டு வாசலில் சத்தம் கேட்ட பிறகு தான் நாங்களும் எனது அம்மாவும்

தூங்கிக்கொண்டு இருந்தவர்கள் வெளியே வந்தோம் என்றால் சரிதான். எனது அம்மா வீட்டில் இருந்து வெளியே வரவேண்டும் என்றால் குனிந்து வரும்வகையில் தான் கூரை வீட்டின் அமைப்பு உள்ளது என்றால் சரிதான். எனது அம்மா கீழே விழுந்த உடன் அதிக ரத்தம் வந்ததா என்றால் இல்லை. எனது அம்மாவை கையால் அடித்து கொன்றுவிட்டார்கள் என்று சொல்கிறேன். அந்த சமயத்தில் ஊர்காரர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 30, 40 பேர் இருந்தார்கள். எனது அம்மா வீட்டிற்கு வெளியே வாசலில் மின்சார லைட் உள்ளதா என்றால் உள்ளது. எங்கள் வீட்டிற்கு வெளியே வரும் வாசலில் அம்மிக்கல் உள்ளதா என்றால் இல்லை. வீட்டை விட்டு வெளியே வந்த உடன் ஏற்கனவே என்ன பிரச்சனை நடந்தது என்று எனது சித்தப்பா சொன்னாரா என்றால் சொன்னார். ஊர்க்காரர்கள் எனது சித்தப்பாவை பார்த்து திட்டிகொண்டிருந்தார்களா என்றால்  இல்லை. சந்திரலேகா வீட்டிற்கு ஆம்பளை இல்லாத வீட்டிற்கு எதற்கு போகிறாய் என்று எனது சித்தப்பா சாரங்கபாணியை ஊர்காரர்கள் திட்டி கொண்டிருந்தார்களா என்றால் அவ்வாறு இல்லை.

போலிசார் என்னை விசாரித்தபோது "*தனவேல், சதீஷ்குமார், சந்திரலேகா ஆகிய மூவரும் எனது அம்மாவை கையால் மார்பிலும் முகத்திலும் வயிற்றிலும் எனது அம்மா மயங்கி விழுந்த பிறகும் அடித்துக்கொண்டு இருந்தார்கள்*" என்று சொன்னேனா என்றால் சொன்னேன்.

போலிசார் என்னை எப்போது விசாரித்தார் என்றால் ஊரில் வந்து விசாரித்தார். எனது அம்மா இறந்த உடன் போலிசார் எனது அம்மா ஊருக்கு வந்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசார் வந்தபோது என்ன நேரம் இருக்கும் என்றால் இரவு 12.30 மணி. அங்கு போலிசார் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் 2 மணி நேரம் இருந்தார்கள். எனது அம்மாவின் பிரேதத்தை போலிசார் செல்லும்போது எடுத்துச்சென்று விட்டார்கள் என்றால் சரிதான். நானும் எனது அக்காவும் எனது உறவினர்களும் காலை முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்றோம். அதுவரையிலும் நானும் எனது அக்காவும் கரிக்கையில் எனது அம்மா வீட்டில்தான் இருந்தோமா என்றால் சரிதான். சாரங்கபாணி மீது

சந்திரலேகா போலிசில் புகார் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வதுபோல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எனது சித்தப்பா, போலிஸ் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்று புலவன் குப்பத்தில் தான் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் எனது அம்மாவின் இறப்பிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 04.14)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.